(See Rule 42 of CRPC)

DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTUR
**CC. NO.666 /2019**
**Depostitions of PW- 4 Witness for**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. பொன்முருகன் | Caste | |
| Father's name | கிருஷ்ணமூர்த்தி | Calling | கூலி வேலை |
| Village | மம்சாபுரம் | Religion | |
| Taluk | திருவில்லிபுத்தூர் | Age. | 27 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 29th day of August-2024

Signature of Witness.

29.08.2024

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை–**

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். கடந்த 27.5.2019 ம் தேதி காலை 8.45 மணியளவில் நானும், எனது மாமா ஆறுமுகமும் எங்கள் வீட்டின் முன்பு நின்று பேசிக்கொண்டிருந்தோம். அப்போது மம்சாபுரம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அங்கு வந்து என் முன்னிலையிலும், ஆறுமுகம் முன்னிலையிலும் சம்பவ இடத்தை பார்வையிட்டு ஒரு வரைபடம் வரைந்தார்கள். அதில் நானும், ஆறுமுகமும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். **பார்வை மகசர் அசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

2. நானும் எனது மாமாவும் போலீசார் எழுதிய பேப்பரில் கையெழுத்து

செய்து கொடுத்தோம் என்றால் சரிதான். எங்கள் முன்னிலையில் தான் போலீசார் அந்த இடத்தில் வைத்து எழுதினார்கள். முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் சொன்ன நேரம், இடத்தில் கையெழுத்து எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து போலிசார் எங்களிடம் கையெழுத்து வாங்கி கொண்டார்கள் என்றால் சரியல்ல.